**எஸ்.டி.சி.எண். 2822/2023 நாள்- 10.01.2024 பக்கம் - /202**

**எதிரி ஆஜர்.**

**ம.சா .1 சீனிவாசமூர்த்தி, த/பெ.விவேகானந்தன்**

**ம.சா.1 சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1) ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.9 வரை குறிப்பிட்டுள்ள கடனுறுதிச் சீட்டுகள் 24.05.2014-ம் தேதியிலிருந்து 10.06.2014-ம் தேதி வரை நடந்த பரிவர்த்தனைக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புரோநோட்டில் ரூ.100/-க்கு எவ்வளவு வட்டி வீதம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 0.07 பைசா வட்டியாகும். மேற்படி 7 கடனுறுதிச் சீட்டுக்களும் தலா ரூ.1 லட்சத்திற்கு 0.07 பைசா வட்டி என்றால் சரிதான். கட.னுறுதிச் சீட்டில் தலைப்பு தொகை, ஆங்கில ஆண்டு, மாதம் மற்றும் தமிழ் மாதம் ஆண்டு, எழுத்தால் எழுதப்பட்டுள்ள ரூ.1 லட்சம் ஆகியவை ஒரே மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) என்னுடைய முகவரி மற்றும் எதிரியின் முகவரி, வட்டி தொகை வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல்தான் ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.9 வரையுள்ள ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான்.எழுதியதும், சாட்சியும் ஆவேன் என்ற மை வேறு மை என்றால் முகவரி எழுதிய அதே மையினால்தான் எழுதப்பட்டுள்ளது. சாட்சி கையெழுத்துள்ள மையானது வேறு மை என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 7 கடனுறுதிச் சீட்டுக்களும் 3 மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடனுறுதிச் சீட்டுக்களில் ஒட்டப்பட்டுள்ள முத்திரை வில்லையானது 2014 ம் ஆண்டிற்கானது கிடையாது என்றால் சரியல்ல.

3) கடனுறுதிச் சீட்டில் ஒட்டப்பட்டுள்ள முத்திரைவில்லையானது 9 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் கடனுறுதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள தொகைகள் எதிரிக்கு அவரது வங்கிக்கு காசோலையின் மூலம் சென்றுள்ளதா என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் என் வசம் அதற்கான ஆதாரம் உள்ளது. எனக்கும் பாரதிதாசனுக்கும் கடைசியாக தொழில் ரீதியாக எந்த ஆண்டு வரவு செலவு ஏற்பட்டது என்றால் சுமார் 2018 ம் ஆண்டு வரை ஆகும். தாவா கடனுறுதிச் சீட்டின்படி நான் 2017-ம் ஆண்டுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் 2016 ம் ஆண்டு எதிரியிடமிருந்து ரூ.7 லட்சம் தருவதற்கான confirmation letter வாங்கி வைத்துள்ளோம்.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

4) தாவா கடனுறதிச் சீட்டில்அவ்வாறு மேற்குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா கடனுறுதிச் சீட்டின் இடது கை பெருவிரல் ரேகை வைப்பதற்கான காலத்தில் பாரதிதாசனிடமிருந்து இடது கை பெருவிரல் ரேகை ம.சா.ஆ.3 முதல் 9 வரை பெறப்படவில்லை என்றால் சரிதான். உண்மையாகவே இந்த ஆவணங்கள் 2014 ம் ஆண்டு எழுதியிருந்தால் அவருடைய கைரேகை பெறப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு வாங்காததற்கு காரணம் கைரேகையை Expert opinion-க்கு அனுப்பினால் உண்மை தன்மை தெரிய வரும் என்பதற்காக அவருடைய மாதிரி கையொப்பத்தை மோசடியாக போட்டு தாவா கடனுறுதிச் சீட்டுக்களை நான் உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல.

5) அதனால்தான் ம.சா.ஆ.3 முதல் 9 வரையான கடனுறுதிச் சீட்டுக்களில் 3 வகையான மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. Confirmation letter ம.சா.ஆ.10 அசல் ஆவணம் என் வசம் உள்ளதா என்றால் அது எனது மேலாளர் வசம் இருந்தது, அவர் 2023 ம் ஆண்டு டிசம்பர் மாதம் இறந்துவிட்டதால் அவர் எங்கு வைத்துள்ளார் என்று எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது மேலாளர் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அப்போது confirmation letter அசலை புகாரோடு சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) நான் 2014 ல் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் கடனுறுதிச் சீட்டுக்கான தொகைக்கான வட்டியோடு சேர்த்து காசோலை வாங்கவில்லை என்றால் சரிதான். 2014 ம் ஆண்டு முதல் 2018 வரையான காலகட்டத்தில் கடனுறதிச் சீட்டுக்கான தொகைக்கான வட்டியை நான் பெற்று வரவு வைத்தேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.10 ல் முன்பணத் தொகை ரூ.7 லட்சம் கொடுக்கவேண்டும் என்றுதான் சங்கதி உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ல் எதிரி எந்த தேதியில் கடன் வாங்கினார், எவ்வளவு தொகை எந்த காசோலையின் மூலம் வாங்கினார் என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

7) பாரதிதாசன் எங்களுடைய நிறுவனத்தில் எத்தனை ஆண்டுகளாக இறுதியாக தொழில் செய்து வந்தார் என்றால், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 2017 ம் ஆண்டு வரை எங்கள் கம்பெனிக்குள்ளான தொழிலை செய்து வந்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ம.சா.ஆ.10 ல் 31.03.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ள பொருளில் குறிப்பிட்டு கடித நாள் 03.05.2016 என்று உள்ளது என்றால் சரிதான். கடனுறுதிச் சீட்டில் உள்ள ம.சா.ஆ.3 முதல் 9 மற்றும் ம.சா.ஆ.10 ல் உள்ள கையெழுத்துக்கள் எதிரியுடையதுதான் என்பதை நிரூபணம் செய்ய வல்லுநரின் கருத்துரைக்கு அனுப்புவதில் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

8)  ம.சா.ஆ.3 முதல் 10 வரையான ஆவணங்களில் எந்த தேதியில் எதிரி கையெழுத்து செய்தார் என்று கீழே தேதி குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்